**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 637 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | திருமதி. சாரதாதேவி |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.11.2023**

எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அனுப்பானடியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1 வது எதிரி என் அம்மாவின் உடன் பிறந்த தாய்மாமா ஆவார். 2,3 எதிரிகள் என் தாய்மாமா கருப்பையாவின் மகன்கள். எனக்கு திருமணமாகி ஒரு ஆண் குழந்தை உள்ளது. எனது அம்மா கடந்த 2000 ம் வருடத்தில் இறந்துவிட்டார். எனது அப்பாவிற்கு 2009 ம் வருடம் heart attack வந்து இறந்துவிட்டார். எனக்கு உடந்தபிறந்த 2 தம்பிகள் உள்ளார்கள். கடந்த 2009 ம் வருடம் எனது அப்பா இறந்தபின்னர் என்னையும் என் தம்பிகளையும் என் அப்பா உடன் பிறந்த தம்பியான சித்தப்பா அழைத்துச் சென்றார். என் தம்பிகள் அவருடன் இருக்கமாட்டேன் என்று சொல்லி என் தாய்மாமா கருப்பையா என்பவர் வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள். அப்போது நான் கல்லூரியில் தங்கி 2 ம் ஆண்டு B.Sc (Computer science) படித்து வந்தேன். அப்போது 05.08.2012 ம் தேதி நான்

விடுமுறைக்கு என் சித்தப்பா முருகேசன் என்பவர் வீட்டிற்கு வந்தேன். அதற்கு 2 மாதங்களுக்கு முன்பு எனது தாய்மாமா கருப்பையா எனது சித்தப்பா வீட்டிற்கு வந்து என்னை அவரது மகன் சேதுவிற்கு பெண்கேட்டார். என்னிடம் கேட்டதற்கு நான் முடியாது என்று மறுத்துவிட்டேன். இந்த நிலையில் உன்னைக் கடத்தியாவது போய் கல்யாணம் செய்துவைப்போம் என்று என் தாய்மாமா கருப்பையா சொன்னார். 05.08.2012 அன்று காலை சுமார் 08.00 மணியளவில் எனது தாய்மாமா கருப்பையா, அவரது மகன் மகாராஜன், சேது, கருப்பையாவின் தம்பி வினோத்குமார், கருப்பையாவின் சகலை மகன் பாண்டியராஜன் மற்றும் என் உடன் பிறந்த 2 தம்பிகளையும் என்னை வெள்ளை கலர் ஸ்காப்பியோ மாடல் வண்டியில் வலுக்கட்டாயமாக என்னைக் கடத்திச் சென்றார்கள். என் சித்தி, சித்தப்பா வந்து தடுப்பதற்குள் கார் வேகமாகச் சென்றுவிட்டது. அவர்கள் என்னைக் கடத்திச் செல்லும் போது என்னால் மறுப்பு தெரிவிக்க முடிநத்து. ஆனால் அதற்குள் என்னை கடத்திச் சென்றுவிட்டார்கள். மேலூர் கிராமத்திற்கு அருகில் உள்ள இடைமேலூர் கிராமத்தில் உள்ள கருப்பையாவின் உறவினர் வீட்டில் வைத்து கிருஷ்ணபரமாத்மா என்பவர் முன்னிலையில் திருமணத்திற்கு பேசினார்கள். அங்கு சுமார் 1 மணி நேரம் என்னை வைத்திருந்தார்கள். பின்னர் அதே காரில் என்னை காரைக்குடிக்குக் கடத்திச் சென்றார்கள். அங்கு வினோத் என்பவரின் உறவினர் வீட்டில் வைத்து மீண்டும் திருமணத்திற்குப் பேசினார்கள். இதற்கிடையில் என் சித்தப்பா, ஊமச்சிகுளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த தகவல் தெரிந்து, மறுநாள் காலையில் என் தம்பிகளுடன் என்னை காரைக்குடி பஸ் ஸ்டான்டில் இருந்து மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். என்னை என் சித்தப்பா வீட்டில் இருந்து கடத்தி சென்று காரைக்குடியில் மீண்டும் பஸ் ஏற்றும் வரை என் தம்பிகள் என் உடன் இருந்தார்கள். நான் மாட்டுத்தவணி பஸ் நிலையத்திற்கு வந்தவுடன் என் சித்தப்பாவிற்கு போன் செய்தேன். அவர் என்னை ஊமச்சிகுளம் காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். நான் அங்கு

சென்றபோது, அங்குள்ள அதிகாரி என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களைச் சொன்னேன். என் சித்தப்பா தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

சம்பவம் தொடர்பாக நான் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த நபர் என் அப்பாவின் கூடப்பிறந்த தம்பியான சித்தப்பா என்றால் சரிதான். சம்பவம் நடப்பதற்கு முன்பாகவே எனது பெற்றோர் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதனால் நான் புகார் கொடுத்தவர் கட்டுப்பாட்டில் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. அவரது பாதுகாப்பில் இருந்து வந்தேன். எனது உடன் பிறந்த தம்பிகள் இருவரும் எனது தாய்மாமா கருப்பையா வீட்டில் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். என்னை திருப்பாலை., தாகூர்நகர், முதல் தெருவில் வீட்டு வாசலில் இருந்து கடத்திச் சென்றார்கள். என்னை கடத்திச் சென்ற கார் அந்த வீட்டில் இருந்து சுமார் 2 கிமீ தூரத்தில் நின்றுகொண்டிருந்தது. என்னை வலுக்கட்டாயமாக என் தம்பிகள் இழுத்துச் சென்றார்கள் என்றால் இல்லை. எனது தாய்மாமாவும் அவரது மகன்கள் இழுத்துச் சென்றார்கள். கடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் கார் என்ன வகையான கார் என்று போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அப்போது அது வெள்ளை நிற கார் என்று மட்டும் தான் தெரியும். அதன் பிறகு தான் அந்த கார் என்ன மாடல் என்று தெரிந்து கொண்டேன். காரின் பதிவு எண் என்னால் சொல்ல இயலாது. என்னைக் கடத்தியதாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல. உண்மையில் என்னைக் கடத்திச் சென்றிருந்தால் அந்த காரின் பதிவெண் தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. என்னை வலுக்கட்டாயமாக கடத்திச் சென்றார்கள். என்னைக் கடத்தும் சமயத்தில் என் சித்தப்பா வீட்டில் இருந்தார். என் சித்தப்பா வந்து எதுவும் தடுக்கவில்லை என்றால் அவர் வருவதற்குள் என்னை எதிரிகள் இழுத்துச் சென்றுவிட்டார்கள். நான், 11, 12 ம் வகுப்பு

படிக்கும்போது நான் எனது பாட்டி மூக்கம்மாள் என்பவர் வீட்டில் தங்கி படித்து வந்தேன் என்றால் சரியல்ல. Hostel ல் இருந்து படித்து வந்தேன். அதற்கு fees எனது சித்தப்பா தான் கட்டினார். எனக்கும் என் சித்தப்பாவிற்கும் இடையே சொத்து சம்பந்தமாக சிவில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். அது கூட்டுப்பட்டாவாக இருப்பதால் என் உடன்பிறந்தவர்கள் மீதும் என் சித்தப்பா மீதும் வழக்கு போட்டுள்ளேன். சொத்து வரவேண்டும் என்பதற்காக நானும் என் சித்தப்பாவும் சேர்ந்து கொண்டு எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் கருப்பையா, வினோத்குமார், ஆகியோர் என் அம்மாவின் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கண்ட 6,7 எதிரிகள் எனது உடன்பிறந்த சகோதரர்கள். அப்போது அவர்கள் மைனர்கள். அவர்கள் இந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று சிறுவர் நீதிமன்ற குழுமத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 05.08.2012 ம் தேதிக்கு முன்பு எதிரி கருப்பையா என்னைப் பெண் கேட்டு வரவில்லை என்றால் சரியல்ல. என்னை யாரும் பெண் கேட்டு வரவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பிறகு என்னை என் பாட்டி மூக்கம்மாள், சகோதரர்கள் ஆகீயோர் தான் காவல்நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். என் பாட்டி மதுரை மாட்டுத்தாவணி பஸ் ஸ்டான்டில் இருந்து காவல்நிலையத்திற்கு என்னுடன் வந்தார். என் பாட்டியும், என் சகோதரர்கள் இருவரும் தான் என்னை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். இடைமேலூரில் என்னை வைத்திருந்த வீட்டின் உரிமையாளரை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நானும், என் சகோதரர்களும் என் பாட்டி மூக்கம்மாளின் பாராமரிப்பில் இருந்து வந்தோம் என்றும் சொத்திற்காக எனது சித்தப்பாவுடன் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசாரிடம் என் தம்பிகளை இந்த வழக்கில் சேர்க்கவேண்டாம் என்று சொன்னேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் என் சித்தப்பாவிற்கும் இடையே சொத்துப் பிரச்சனை

நடந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது சித்தப்பாவிற்கும் எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் உள்ளது என்றும் அதனால் என் சித்தப்பாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் என்னை யாரும் காரில் கடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்திற்காக ஆசைப்பட்டு தான் நான் என் சித்தப்பாவுடன் சேர்ந்துகொண்டு என் சித்தப்பா எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் புகார் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கல்லூரியில் தங்கி படித்து வருவதால் விடுமுறைக்கு வருவது எதிரிகளுக்குத் தெரிய வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. திருப்பாலையில் இருந்து என்னைக் காரில் கடத்திச் சென்றதாகச் சொல்லப்படும் இடம் போக்குவரத்து நெரிசலான பகுதி என்றும் அங்கு கார் உள்ளே சென்று திருப்பி வருவது சிரமமாக இருக்கும் என்றால் சரியல்ல. என் சித்தப்பா வீட்டிற்கு அருகில் நிறைய கடைகள் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். என்னைக் கடத்தப்பட்டதாகச் சொல்லும் தேதியில் நான் என் பாட்டி மூக்கம்மா வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் எனது பாட்டியுடன் சென்று காவல்நிலையத்தில் ஆஜரானேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை